ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ நாச்சியார் திருமொழி ॥

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

## பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| **1** | நாச்சியார் திருமொழித் தனியன்கள் | **2** |
| **2** | தையொரு திங்கள் | **3** |
| **3** | நாமமாயிரம் | **7** |
| **4** | கோழியழைப்பதன் | **11** |
| **5** | தெள்ளியார் பலர் | **15** |
| **6** | மன்னு பெரும்புகழ் | **19** |
| **7** | வாரணமாயிரம் | **23** |
| **8** | கருப்பூரம் நாறுமோ | **27** |
| **9** | விண்ணீல மேலாப்பு | **31** |
| **10** | சிந்துரச் செம்பொடி | **35** |
| **11** | கார்க்கோடல் பூக்காள் | **39** |
| **12** | தாமுகக்கும் | **43** |
| **13** | மற்றிருந்தீர் | **47** |
| **14** | கண்ணனென்னும் | **51** |
| **15** | பட்டி மேய்ந்து | **55** |

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# நாச்சியார் திருமொழித் தனியன்கள்

தனியன்கள்

அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கின் இன் துணைவி ⋆
மல்லிநாடாண்ட மடமயில் மெல்லியலாள் ⋆
ஆயர் குலவேந்தன் ஆகத்தாள் ⋆
தென் புதுவை வேயர் பயந்த விளக்கு

நாச்சியார் திருமொழித் தனியன்கள் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1 – தையொரு திங்கள்

‡ தையொரு திங்களும் தரை விளக்கித் ⋆
தண் மண்டலம் இட்டு மாசி முன்னாள் ⋆
ஐய நுண் மணல் கொண்டு தெரு அணிந்து ⋆
அழகினுக்கலங்கரித்தனங்கதேவா ! ⋆
உய்யவும் ஆங்கொலோ என்று சொல்லி ⋆
உன்னையும் உம்பியையும் தொழுதேன் ⋆
வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக் கை ⋆
வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே ‖ **1.1** ‖ 1

வெள்ளை நுண் மணல் கொண்டு தெரு அணிந்து ⋆
வெள்வரைப் பதன் முன்னம் துறை படிந்து ⋆
முள்ளும் இல்லாச் சுள்ளி எரி மடுத்து ⋆
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா ⋆
கள் அவிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு ⋆
கடல் வண்ணன் என்பதோர் பேர் எழுதி ⋆
புள்ளினை வாய் பிளந்தான் என்பதோர் ⋆
இலக்கினில் புக என்னை எய்கிற்றியே ‖ **1.2** ‖ 2

மத்த நன் நறு மலர் முருக்க மலர் கொண்டு ⋆
முப்போதும் உன்னடி வணங்கி ⋆
தத்துவம் இலி என்று நெஞ்செரிந்து ⋆
வாசகத்தழித்துன்னை வைதிடாமே ⋆
கொத்தலர் பூங்கணை தொடுத்துக்கொண்டு ⋆

கோவிந்தன் என்பதோர் பேர் எழுதி ⋆
வித்தகன் வேங்கட வாணன் என்னும் ⋆
விளக்கினில் புக என்னை விதிக்கிற்றியே ॥ **1.3** ॥ 3

சுவரில் புராண ! நின் பேர் எழுதிச் ⋆
சுறவ நற் கொடிக்களும் துரங்கங்களும் ⋆
கவரிப் பிணாக்களும் கருப்பு வில்லும் ⋆
காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா ⋆
அவரைப் பிராயம் தொடங்கி ⋆
என்றும் ஆதரித்தெழுந்த என் தட முலைகள் ⋆
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் ⋆
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே ॥ **1.4** ॥ 4

வானிடை வாழும் அவ்வானவர்க்கு ⋆
மறையவர் வேள்வியில் வகுத்த அவி ⋆
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து ⋆
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப ⋆
ஊனிடை ஆழி சங்குத்தமர்க்கென்று ⋆
உன்னித்தெழுந்த என் தட முலைகள் ⋆
மானிடவர்க்கென்று பேச்சுப் படில் ⋆
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே ! ॥ **1.5** ॥ 5

உரு உடையார் இளையார்கள் நல்லார் ⋆
ஓத்து வல்லார்களைக் கொண்டு ⋆
வைகல் தெருவிடை எதிர் கொண்டு ⋆
பங்குனி நாள் திருந்தவே நோற்கின்றேன் காமதேவா ⋆
கரு உடை முகில் வண்ணன் காயா வண்ணன் ⋆
கருவிளை போல் வண்ணன் கமல வண்ணத் ⋆

திரு உடை முகத்தினில் திருக் கண்களால் ⋆
திருந்தவே நோக்கெனக்கருள் கண்டாய் ‖ **1.6** ‖ 6

காயுடை நெல்லொடு கரும்பமைத்துக் ⋆
கட்டி அரிசி அவல் அமைத்து ⋆
வாயுடை மறையவர் மந்திரத்தால் ⋆
மன்மதனே ! உன்னை வணங்குகின்றேன் ⋆
தேசமுன் அளந்தவன் திரிவிக்கிரமன் ⋆
திருக்கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம் ⋆
சாயுடை வயிறும் என் தட முலையும் ⋆
தரணியில் தலைப் புகழ் தரக்கிற்றியே ‖ **1.7** ‖ 7

மாசுடை உடம்பொடு தலை உலறி ⋆
வாய்ப் புறம் வெளுத்தொரு போதும் உண்டு ⋆
தேசுடைத் திறல் உடைக் காமதேவா ! ⋆
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள் கண்டாய் ⋆
பேசுவதொன்றுண்டிங்கெம் பெருமான் ⋆
பெண்மையைத் தலை உடைத்தாக்கும் வண்ணம் ⋆
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள் என்னும் ⋆
இப்பேறெனக்கருள் கண்டாய் ‖ **1.8** ‖ 8

தொழுது முப்போதும் உன்னடி வணங்கி ⋆
தூ மலர் தூய்த் தொழுதேத்துகின்றேன் ⋆
பழுதின்றிப் பார்க் கடல் வண்ணனுக்கே ⋆
பணி செய்து வாழப் பெறாவிடில் நான் ⋆
அழுதழுதலமந்தம்மா வழங்க ⋆
ஆற்றவும் அது உனக்குறைக்கும் கண்டாய் ⋆

உழுவதோர் எருத்தினை நுகங்கொடு பாய்ந்து ⋆
ஊட்டம் இன்றி துரந்தால் ஒக்குமே ‖ **1.9** ‖ 9

‡ கருப்பு வில் மலர்க் கணைக் காம வேளைக் ⋆
கழல் இணை பணிந்தங்கோர் கரி அலற ⋆
மருப்பினை ஒசித்துப் புள் வாய் பிளந்த ⋆
மணிவண்ணற்கென்னை வகுத்திடென்று ⋆
பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும் ⋆
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை ⋆
விருப்புடை இன் தமிழ் மாலை வல்லார் ⋆
விண்ணவர் கோன் அடி நண்ணுவரே ‖ **1.10** ‖ 10

அடிவரவு — தை வெள்ளை மத்தம் சுவரில் வானிடை உரு காயுடை மாசுடை தொழுது கருப்பு நாமம்

தையொரு திங்கள் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 2 – நாமமாயிரம்

‡ நாமம் ஆயிரம் ஏத்த நின்ற ⋆
நாராயணா ! நரனே ! ⋆
உன்னை மாமி தன் மகன் ஆகப் பெற்றால் ⋆
எமக்கு வாதை தவிருமே ⋆
காமன் போதரு காலம் என்று ⋆
பங்குனி நாள் கடை பாரித்தோம் ⋆
தீமை செய்யும் சிரீதரா ! ⋆
எங்கள் சிற்றில் வந்து சிதையேலே ‖ **2.1** ‖ 11

இன்று முற்றும் முதுகு நோவ ⋆
இருந்திழைத்த இச்சிற்றிலை ⋆
நன்றும் கண்ணுற நோக்கி ⋆
நாங்கொளும் ஆர்வந் தன்னைத் தணி கிடாய் ⋆
அன்று பாலகன் ஆகி ⋆
ஆலிலை மேல் துயின்ற எம் ஆதியாய் ! ⋆
என்றும் உன்தனக்கெங்கள் மேல் ⋆
இரக்கம் எழாததெம் பாவமே ‖ **2.2** ‖ 12

குண்டு நீர் உறை கோளரீ ! ⋆
மத யானை கோள் விடுத்தாய் ! ⋆
உன்னைக் கண்டு மால் உறுவோங்களைக் ⋆
கடைக் கண்களால் இட்டு வாதியேல் ⋆
வண்டல் நுண் மணல் தெள்ளி ⋆

யாம் வளைக் கைகளால் சிரமப் பட்டோம் ⋆
தெண் திரைக் கடற் பள்ளியாய் ! ⋆
எங்கள் சிற்றில் வந்து சிதையேலே ॥ **2.3** ॥ 13

பெய்யு மா முகில் போல் வண்ணா ! ⋆
உன்தன் பேச்சும் செய்கையும் ⋆
எங்களை மையல் ஏற்றி மயக்க ⋆
உன் முகம் மாய மந்திரம் தான் கொலோ ⋆
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு ⋆
உன்னை நோவ நாங்கள் உரைக்கிலோம் ⋆
செய்ய தாமரைக் கண்ணினாய் ! ⋆
எங்கள் சிற்றில் வந்து சிதையேலே ॥ **2.4** ॥ 14

வெள்ளை நுண் மணல் கொண்டு ⋆
சிற்றில் விசித்திரப் பட ⋆
வீதி வாய்த் தெள்ளி நாங்கள் இழைத்த கோலம் ⋆
அழித்தி ஆகிலும் உன்தன் மேல் ⋆
உள்ளம் ஓடி உருகல் அல்லால் ⋆
உரோடம் ஒன்றும் இலோம் கண்டாய் ⋆
கள்ள மாதவா ! கேசவா ! ⋆
உன் முகத்தன கண்கள் அல்லவே ! ॥ **2.5** ॥ 15

முற்றிலாத பிள்ளைகளோம் ⋆
முலை போந்திலா தோமை ⋆
நாள்தொறும் சிற்றில் மேல் இட்டுக் கொண்டு ⋆
நீ சிறிதுண்டு திண்ணென நாம் அது கற்றிலோம் ⋆
கடலை அடைத்தரக்கர் குலங்களை ⋆
முற்றவும் செற்று ⋆

இலங்கையைப் பூசல் ஆக்கிய சேவகா ! ⋆
எம்மை வாதியேல் ‖ **2.6** ‖ 16

பேதநன்கறிவார்களோடு ⋆
இவை பேசினால் பெரிதின் சுவை ⋆
யாதும் ஒன்றறியாத பிள்ளைகளோமை ⋆
நீ நலிந்தென் பயன் ⋆
ஓத மா கடல் வண்ணா ! ⋆
உன் மணவாட்டி மாரொடு சூழறும் ⋆
சேது பந்தம் திருத்தினாய் ! ⋆
எங்கள் சிற்றில் வந்து சிதையேலே ‖ **2.7** ‖ 17

வட்ட வாய்ச் சிறு தூதையோடு ⋆
சிறு சுளகும் மணலும் கொண்டு ⋆
இட்டமா விளையாடு வோங்களைச் ⋆
சிற்றில் ஈடழித்தென் பயன் ⋆
தொட்டுதைத்து நலியேல் கண்டாய் ⋆
சுடர்ச் சக்கரம் கையில் ஏந்தினாய் ⋆
கட்டியும் கைத்தால் இன்னாமை ⋆
அறிதியே கடல் வண்ணனே ! ‖ **2.8** ‖ 18

முற்றத்தூடு புகுந்து ⋆
நின் முகம் காட்டிப் புன் முறுவல் செய்து ⋆
சிற்றிலோடெங்கள் சிந்தையும் ⋆
சிதைக்கக் கடவையோ கோவிந்தா ⋆
முற்ற மண்ணிடம் தாவி ⋆
விண்ணுற நீண்டளந்து கொண்டாய் ⋆

எம்மைப் பற்றி மெய்ப் பிணக்கிட்டக்கால் ⋆
இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார் ‖ **2.9** ‖ 19

‡ சீதை வாய் அமுதம் உண்டாய் ! ⋆
எங்கள் சிற்றில் நீ சிதையேல் என்று ⋆
வீதிவாய் விளையாடும் ⋆
ஆயர் சிறுமியர் மழலைச் சொல்லை ⋆
வேத வாய்த் தொழிலார்கள் வாழ் ⋆
வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன் தன் ⋆
கோதை வாய்த் தமிழ் வல்லவர் ⋆
குறைவின்றி வைகுந்தம் சேருவரே ‖ **2.10** ‖ 20

அடிவரவு — நாமம் இன்று குண்டு பெய்யும் வெள்ளை முற்றிலாத பேதம் வட்டம் முற்றத்தூடு சீதை கோழி

நாமமாயிரம் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3 – கோழியழைப்பதன்

‡ கோழி அழைப்பதன் முன்னம் ⋆
குடைந்து நீராடுவான் போந்தோம் ⋆
ஆழியஞ்செல்வன் எழுந்தான் ⋆
அரவணை மேல் பள்ளி கொண்டாய் ⋆
ஏழைமை ஆற்றவும் பட்டோம் ⋆
இனி என்றும் பொய்கைக்கு வாரோம் ⋆
தோழியும் நானும் தொழுதோம் ⋆
துகிலைப் பணித்தருளாயே ‖ **3.1** ‖ 21

இதுவென் புகுந்ததிங்கந்தோ ! ⋆
இப்பொய்கைக்கெவ்வாறு வந்தாய் ⋆
மதுவின் துழாய் முடி மாலே ! ⋆
மாயனே ! எங்கள் அமுதே ! ⋆
விதி இன்மையால் அது மாட்டோம் ⋆
வித்தகப் பிள்ளாய் ! விரையேல் ⋆
குதி கொண்டரவில் நடித்தாய் ! ⋆
குருந்திடைக் கூறை பணியாய் ‖ **3.2** ‖ 22

எல்லே ! ஈதென்ன இளமை ⋆
எம் அனைமார் காணில் ஒட்டார் ⋆
பொல்லாங்கீதென்று கருதாய் ⋆
பூங்குருந்தேறி இருத்தி ⋆
வில்லால் இலங்கை அழித்தாய் ! ⋆

நீ வேண்டியதெல்லாம் தருவோம் ⋆
பல் ஆரும் காணாமே போவோம் ⋆
பட்டைப் பணித்தருளாயே ‖ **3.3** ‖ 23

பரக்க விழித்தெங்கும் நோக்கிப் ⋆
பலர் குடைந்தாடும் சுனையில் ⋆
அரக்க நில்லா கண்ண நீர்கள் ⋆
அலமருகின்றவா பாராய் ⋆
இரக்கமேல் ஒன்றும் இலாதாய் ! ⋆
இலங்கை அழித்த பிரானே ⋆
குரக்கரசாவதறிந்தோம் ⋆
குருந்திடைக் கூறை பணியாய் ‖ **3.4** ‖ 24

காலைக் கது விடுகின்ற ⋆
கயலொடு வாளை விரவி ⋆
வேலைப் பிடித்தென் ஐமார்கள் ஓட்டில் ⋆
என்ன விளையாட்டோ ⋆
கோலச் சிற்றாடை பலவும் கொண்டு ⋆
நீ ஏறி இராதே ⋆
கோலம் கரிய பிரானே ! ⋆
குருந்திடைக் கூறை பணியாய் ‖ **3.5** ‖ 25

தடத்தவிழ் தாமரைப் பொய்கைத் ⋆
தாள்கள் எம் காலைக் கதுவ ⋆
விடத் தேள் எறிந்தாலே போல ⋆
வேதனை ஆற்றவும் பட்டோம் ⋆
குடத்தை எடுத்தேற விட்டுக் ⋆
கூத்தாட வல்ல எங்கோவே ⋆

படிற்றை எல்லாம் தவிர்ந்து ⋆
எங்கள் பட்டைப் பணித்தருளாயே ॥ **3.6** ॥ 26

நீரிலே நின்றயர்க்கின்றோம் ⋆
நீதி அல்லாதன செய்தாய் ⋆
ஊரகம் சாலவும் சேய்த்தால் ⋆
ஊழி எல்லாம் உணர்வானே ! ⋆
ஆர்வம் உனக்கே உடையோம் ⋆
அம்மனை மார் காணில் ஒட்டார் ⋆
போர விடாய் எங்கள் பட்டை ⋆
பூங்குருந்தேறி இராதே ॥ **3.7** ॥ 27

மாமிமார் மக்களே அல்லோம் ⋆
மற்றும் இங்கெல்லாரும் போந்தார் ⋆
தூ மலர்க் கண்கள் வளரத் ⋆
தொல்லை இராத் துயில்வானே ! ⋆
சேமமேல் அன்றிது சாலச் ⋆
சிக்கென நாம் இது சொன்னோம் ⋆
கோமள ஆயர் கொழுந்தே ! ⋆
குருந்திடைக் கூறை பணியாய் ॥ **3.8** ॥ 28

கஞ்சன் வலை வைத்த அன்று ⋆
கார் இருள் எல்லில் பிழைத்து ⋆
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய் ⋆
நின்ற இக் கன்னியரோமை ⋆
அஞ்ச உரப்பாள் அசோதை ⋆
ஆணாட விட்டிட்டிருக்கும் ⋆

வஞ்சகப் பேய்ச்சி பால் உண்ட ⋆
மகிமை இலீ ! கூறை தாராய் ‖ **3.9** ‖ 29

‡ கன்னியரோடெங்கள் நம்பி ⋆
கரிய பிரான் விளையாட்டை ⋆
பொன் இயல் மாடங்கள் சூழ்ந்த ⋆
புதுவையர் கோன் பட்டன் கோதை ⋆
இன் இசையால் சொன்ன மாலை ⋆
ஈர் ஐந்தும் வல்லவர் தாம் போய் ⋆
மன்னிய மாதவனோடு ⋆
வைகுந்தம் புக்கிருப்பாரே ‖ **3.10** ‖ 30

அடிவரவு — கோழி இது எல்லே பரக்க காலை தடத்து நீரில் மாமிமார் கஞ்சன் கன்னியரோடு தெள்ளியார்

கோழியழைப்பதன் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4 – தெள்ளியார் பலர்

‡ தெள்ளியார் ⋆
பலர் கை தொழும் தேவனார் ⋆
வள்ளல் ⋆
மாலிருஞ்சோலை மணாளனார் ⋆
பள்ளி கொள்ளும் இடத்து ⋆
அடி கொட்டிடக் ⋆
கொள்ளு மாகில் ⋆
நீ கூடிடு கூடலே ! ‖ **4.1** ‖ 31

‡ காட்டில் வேங்கடம் ⋆
கண்ண புர நகர் ⋆
வாட்டம் இன்றி ⋆
மகிழ்ந்துறை வாமனன் ⋆
ஓட்டரா வந்து ⋆
என் கைப் பற்றி ⋆
தன்னொடும் கூட்டு மாகில் ⋆
நீ கூடிடு கூடலே ! ‖ **4.2** ‖ 32

பூ மகன் புகழ் வானவர் ⋆
போற்றுதற்கா மகன் ⋆
அணி வாணுதல் ⋆
தேவகி மாமகன் ⋆
மிகு சீர் ⋆

வசுதேவர் தம் ⋆
கோமகன் வரில் ⋆
கூடிடு கூடலே ! ‖ **4.3** ‖ 33

ஆய்ச்சி மார்களும் ⋆
ஆயரும் அஞ்சிட ⋆
பூத்த நீள் ⋆
கடம்பேறிப் புகப் பாய்ந்து ⋆
வாய்த்த காளியன் மேல் ⋆
நடம் ஆடிய ⋆
கூத்தனார் வரில் ⋆
கூடிடு கூடலே ! ‖ **4.4** ‖ 34

மாட மாளிகை சூழ் ⋆
மதுரைப் பதி நாடி ⋆
நந் தெருவின் ⋆
நடுவே வந்திட்டு ⋆
ஓடை மா மத யானை ⋆
உதைத்தவன் ⋆
கூடுமாகில் ⋆
நீ கூடிடு கூடலே ! ‖ **4.5** ‖ 35

அற்றவன் ⋆
மருதம் முறிய நடை கற்றவன் ⋆
கஞ்சனை ⋆
வஞ்சனையில் செற்றவன் ⋆
திகழும் ⋆
மதுரைப் பதி ⋆

கொற்றவன் வரில் ⋆
கூடிடு கூடலே ! ‖ **4.6** ‖ 36

அன்றின்னாதன செய் ⋆
சிசுபாலனும் ⋆
நின்ற நீள் மருதும் ⋆
எருதும் புள்ளும் ⋆
வென்றி வேல் விறல் ⋆
கஞ்சனும் வீழ ⋆
முன் கொன்றவன் வரில் ⋆
கூடிடு கூடலே ! ‖ **4.7** ‖ 37

ஆவல் அன்புடையார் தம் ⋆
மனத்தன்றி மேவலன் ⋆
விரை சூழ் ⋆
துவரா பதிக் காவலன் ⋆
கன்று மேய்த்து ⋆
விளையாடும் ⋆
கோவலன் வரில் ⋆
கூடிடு கூடலே ! ‖ **4.8** ‖ 38

கொண்ட கோலக் ⋆
குறள் உருவாய்ச் சென்று ⋆
பண்டு மாவலி தன் ⋆
பெரு வேள்வியில் ⋆
அண்டமும் நிலனும் ⋆
அடி ஒன்றினால் ⋆

கொண்டவன் வரில் ⋆
கூடிடு கூடலே ! ‖ **4.9** ‖ 39

பழகு நான் மறையின் ⋆
பொருளாய் ⋆
மதம் ஒழுகு வாரணம் ⋆
உய்ய அளித்த ⋆
எம் அழகனார் ⋆
அணி ஆய்ச்சியர் சிந்தையுள் ⋆
குழகனார் வரில் ⋆
கூடிடு கூடலே ! ‖ **4.10** ‖ 40

‡ ஊடல் கூடல் ⋆
உணர்தல் புணர்தலை ⋆
நீடு நின்ற ⋆
நிறை புகழ் ஆய்ச்சியர் ⋆
கூடலைக் ⋆
குழற் கோதை முன் கூறிய ⋆
பாடல் பத்தும் வல்லார்க்கு ⋆
இல்லை பாவமே ‖ **4.11** ‖ 41

அடிவரவு — தெள்ளியார் காட்டில் பூமகன் ஆய்ச்சிமார் மாடம் அற்றவன் அன்று ஆவல் கொண்ட பழகு ஊடல் மன்னு

தெள்ளியார் பலர் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 5 – மன்னு பெரும்புகழ்

‡ மன்னு பெரும் புகழ் மாதவன் ⋆
மா மணி வண்ணன் மணிமுடி மைந்தன் தன்னை ⋆
உகந்தது காரணம் ஆக ⋆
என் சங்கிழக்கும் வழக்குண்டே ⋆
புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப் ⋆
பொதும்பினில் வாழும் குயிலே ! ⋆
பன்னி எப்போதும் இருந்து விரைந்து ⋆
என் பவள வாயன் வரக் கூவாய் ॥ **5.1** ॥ 42

வெள்ளை விளிசங்கிடம் கையில் கொண்ட ⋆
விமலன் எனக்குருக் காட்டான் ⋆
உள்ளம் புகுந்தென்னை நைவித்து ⋆
நாளும் உயிர் பெய்து கூத்தாட்டுக் காணும் ⋆
கள் அவிழ் செண்பகப் பூ மலர் கோதிக் ⋆
களித்திசை பாடும் குயிலே ⋆
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது ⋆
என் வேங்கடவன் வரக் கூவாய் ॥ **5.2** ॥ 43

மாதலி தேர் முன்பு கோல் கொள்ள ⋆
மாயன் இராவணன் மேல் ⋆
சர மாரி தாய் தலை அற்றற்று வீழத் ⋆
தொடுத்த தலைவன் வர எங்கும் காணேன் ⋆
போதலர் காவில் புது மணம் நாறப் ⋆

பொறி வண்டின் காமரம் கேட்டு ⋆
உன் காதலியோடுடன் வாழ் குயிலே ! ⋆
என் கரு மாணிக்கம் வரக் கூவாய் ॥ **5.3** ॥ 44

என்புருகி இன வேல் நெடுங்கண்கள் ⋆
இமை பொருந்தா பல நாளும் ⋆
துன்பக் கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் ⋆
தோணி பெறாதுழல்கின்றேன் ⋆
அன்புடையாரைப் பிரிவுறு நோய் ⋆
அது நீயும் அறிதி குயிலே ⋆
பொன் புரை மேனிக் கருளக் கொடி உடை ⋆
புண்ணியனை வரக் கூவாய் ॥ **5.4** ॥ 45

‡ மென்னடை அன்னம் பரந்து விளையாடும் ⋆
வில்லி புத்தூர் உறைவான் தன் ⋆
பொன்னடி காண்பதோர் ஆசையினால் ⋆
என் பொரு கயற் கண்ணிணை துஞ்சா ⋆
இன் அடிசிலொடு பால் அமுதூட்டி ⋆
எடுத்த என் கோலக் கிளியை ⋆
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே ! ⋆
உலகளந்தான் வரக் கூவாய் ॥ **5.5** ॥ 46

எத்திசையும் அமரர் பணிந்தேத்தும் ⋆
இருடீ கேசன் வலி செய்ய ⋆
முத்தன்ன வெண் முறுவல் செய்ய வாயும் ⋆
முலையும் அழகழிந்தேன் நான் ⋆
கொத்தலர் காவில் மணித்தடம் ⋆
கண் படை கொள்ளும் இளங்குயிலே ! ⋆

என் தத்துவனை வரக் கூகிற்றியாகில் ⋆
தலை அல்லால் கைம்மாறிலேனே ! ॥ **5.6** ॥ 47

பொங்கிய பாற் கடல் பள்ளி கொள்வானைப் ⋆
புணர்வதோர் ஆசையினால் ⋆
என் கொங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்து ⋆
ஆவியை ஆகுலம் செய்யும் அங்குயிலே ! ⋆
உனக்கென்ன மறைந்துறைவு ⋆
ஆழியும் சங்கும் ஒண் தண்டும் ⋆
தங்கிய கையவனை வரக் கூவில் ⋆
நீ சாலத் தருமம் பெறுதி ॥ **5.7** ॥ 48

சார்ங்கம் வளைய வலிக்கும் ⋆
தடக் கைச் சதுரன் பொருத்தம் உடையன் ⋆
நாங்கள் எம்மில் இருந்தொட்டிய கச்சங்கம் ⋆
நானும் அவனும் அறிதும் ⋆
தேங்கனி மாம் பொழில் செந்தளிர் கோதும் ⋆
சிறு குயிலே ! ⋆
திருமாலை ஆங்கு விரைந்தொல்லைக் கூகிற்றியாகில் ⋆
அவனை நான் செய்வன காணே ! ॥ **5.8** ॥ 49

பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர் ⋆
பாசத்தகப் பட்டிருந்தேன் ⋆
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில் வாழ் குயிலே ! ⋆
குறிக்கொண்டிது நீ கேள் ⋆
சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதல் ⋆
பொன் வளை கொண்டு தருதல் ⋆

இங்குள்ள காவினில் வாழக் கருதில் ⋆
இரண்டத்தொன்றேல் திண்ணம் வேண்டும் ‖ **5.9** ‖ 50

அன்றுலகம் அளந்தானை உகந்து ⋆
அடிமைக்கண் அவன் வலி செய்ய ⋆
தென்றலும் திங்களும் ஊடறுத்து ⋆
என்னை நலியும் முறைமை அறியேன் ⋆
என்றும் இக் காவில் இருந்திருந்து ⋆
என்னை ததர்த்தாதே நீயும் குயிலே ! ⋆
இன்று நாராயணனை வரக் கூவாயேல் ⋆
இங்குற்று நின்றும் துரப்பன் ‖ **5.10** ‖ 51

‡ விண் உற நீண்டடி தாவிய மைந்தனை ⋆
வேற் கண் மடந்தை விரும்பி ⋆
கண் உற என் கடல் வண்ணனைக் கூவு ⋆
கருங்குயிலே ! என்ற மாற்றம் ⋆
பண் உறு நான் மறையோர் புதுவை மன்னன் ⋆
பட்டர் பிரான் கோதை சொன்ன ⋆
நண் உறு வாசக மாலை வல்லார் ⋆
நமோ நாராயணாய என்பாரே ! ‖ **5.11** ‖ 52

அடிவரவு — மன்னு வெள்ளை மாதலி என்பு மென்னடை எத்திசை பொங்கிய சார்ங்கம் பைங்கிளி அன்று விண் வாரணம்

மன்னு பெரும்புகழ் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 6 – வாரணமாயிரம்

‡ வாரணம் ஆயிரம் ⋆
சூழ வலஞ்செய்து ⋆
நாரண நம்பி ⋆
நடக்கின்றான் என்றெதிர் ⋆
பூரண பொற்குடம் ⋆
வைத்துப் புறம் எங்கும் ⋆
தோரணம் நாட்டக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.1** ‖ 53

நாளை வதுவை ⋆
மணம் என்று நாள் இட்டு ⋆
பாளை கமுகு ⋆
பரிசுடைப் பந்தற் கீழ் ⋆
கோளரி மாதவன் ⋆
கோவிந்தன் என்பான் ஓர் ⋆
காளை புகுதக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.2** ‖ 54

இந்திரன் உள்ளிட்ட ⋆
தேவர் குழாம் எல்லாம் ⋆
வந்திருந்தென்னை ⋆
மகள் பேசி மந்திரித்து ⋆
மந்திரக் கோடி உடுத்தி ⋆

மண மாலை ⋆
அந்தரி சூட்டக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.3** ‖ 55

நால் திசைத் தீர்த்தம் கொணர்ந்து ⋆
நனி நல்கி ⋆
பார்ப்பனச் சிட்டர்கள் ⋆
பல்லார் எடுத்தேத்தி ⋆
பூப் புனை கண்ணிப் ⋆
புனிதனோடென் தன்னை ⋆
காப்பு நாண் கட்டக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.4** ‖ 56

கதிர் ஒளி தீபம் ⋆
கலசம் உடன் ஏந்தி ⋆
சதிர் இள மங்கையர் தாம் ⋆
வந்தெதிர் கொள்ள ⋆
மதுரையார் மன்னன் ⋆
அடி நிலை தொட்டெங்கும் ⋆
அதிரப் புகுதக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.5** ‖ 57

மத்தளம் கொட்ட ⋆
வரி சங்கம் நின்றூத ⋆
முத்துடைத் தாமம் ⋆
நிரை தாழ்ந்த பந்தற் கீழ் ⋆
மைத்துனன் நம்பி ⋆
மதுசூதன் வந்தென்னைக் ⋆

கைத்தலம் பற்றக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.6** ‖ 58

வாய் நல்லார் ⋆
நல்ல மறை ஓதி மந்திரத்தால் ⋆
பாசிலை நாணல் படுத்துப் ⋆
பரிதி வைத்து ⋆
காய் சின மா களிறன்னான் ⋆
என் கைப் பற்றி ⋆
தீ வலஞ்செய்யக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.7** ‖ 59

இம்மைக்கும் ⋆
ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான் ⋆
நம்மை உடையவன் ⋆
நாராயணன் நம்பி ⋆
செம்மை உடைய ⋆
திருக் கையால் தாள் பற்றி ⋆
அம்மி மிதிக்கக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.8** ‖ 60

வரி சிலை வாள் முகத்து ⋆
என் ஐமார் தாம் வந்திட்டு ⋆
எரி முகம் பாரித்து ⋆
என்னை முன்னே நிறுத்தி ⋆
அரி முகன் அச்சுதன் ⋆
கைம்மேல் என் கை வைத்து ⋆

பொரி முகந்தட்டக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.9** ‖ 61

குங்குமம் அப்பிக் ⋆
குளிர் சாந்தம் மட்டித்து ⋆
மங்கல வீதி ⋆
வலஞ்செய்து மண நீர் ⋆
அங்கவனோடும் ⋆
உடன் சென்றங்கானை மேல் ⋆
மஞ்சனம் ஆட்டக் ⋆
கனாக் கண்டேன் தோழீ ! நான் ‖ **6.10** ‖ 62

‡ ஆயனுக் காகத் ⋆
தான் கண்ட கனாவினை ⋆
வேயர் புகழ் ⋆
வில்லி புத்தூர்க் கோன் கோதை சொல் ⋆
தூய தமிழ் மாலை ⋆
ஈர் ஐந்தும் வல்லவர் ⋆
வாயுநன் மக்களை பெற்று ⋆
மகிழ்வரே ‖ **6.11** ‖ 63

அடிவரவு — வாரணம் நாளை இந்திரன் நால்திசை கதிர் மத்தளம் வாய் இம்மைக்கும் வரிசிலை குங்குமம் ஆயனுக்காக கருப்பூரம்

வாரணமாயிரம் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 7 – கருப்பூரம் நாறுமோ

‡ கருப் பூரம் நாறுமோ ⋆
கமலப் பூ நாறுமோ ⋆
திருப் பவளச் செவ்வாய் தான் ⋆
தித்தித்திருக்குமோ ⋆
மருப்பொசித்த மாதவன் தன் ⋆
வாய்ச் சுவையும் நாற்றமும் ⋆
விருப்புற்றுக் கேட்கின்றேன் ⋆
சொல் ஆழி வெண் சங்கே ! ‖ **7.1** ‖ 64

கடலில் பிறந்து ⋆
கருதாது ⋆
பஞ்சசனன் உடலில் வளர்ந்து போய் ⋆
ஊழியான் கைத் தலத்து ⋆
இடரில் குடி ஏறி ⋆
தீய அசுரர் ⋆
நடலைப் பட முழங்கும் ⋆
தோற்றத்தாய் நற்சங்கே ! ‖ **7.2** ‖ 65

தட வரையின் மீதே ⋆
சரத் கால சந்திரன் ⋆
இடை உவாவில் வந்து ⋆
எழுந்தாலே போல ⋆
நீயும் வட மதுரையார் மன்னன் ⋆

வாசுதேவன் கையில் ⋆
குடி ஏறி வீற்றிருந்தாய் ⋆
கோலப் பெருஞ்சங்கே ! ॥ **7.3** ॥ 66

சந்திர மண்டலம் போல் ⋆
தாமோதரன் கையில் ⋆
அந்தரம் ஒன்றின்றி ⋆
ஏறி அவன் செவியில் ⋆
மந்திரம் கொள்வாயே போலும் ⋆
வலம் புரியே ⋆
இந்திரனும் உன்னோடு ⋆
செல்வத்துக்கேலானே ॥ **7.4** ॥ 67

உன்னோடுடனே ⋆
ஒரு கடலில் வாழ்வாரை ⋆
இன்னார் இனையார் என்று ⋆
எண்ணுவார் இல்லை காண் ⋆
மன்னாகி நின்ற ⋆
மதுசூதன் வாய் அமுதம் ⋆
பன்னாளும் உண்கின்றாய் ⋆
பாஞ்சசன்னியமே ! ॥ **7.5** ॥ 68

போய்த் தீர்த்தம் ஆடாதே ⋆
நின்ற புணர் மருதம் ⋆
சாய்த்தீர்த்தான் கைத் தலத்தே ⋆
ஏறிக் குடி கொண்டு ⋆
சேய்த் தீர்த்தமாய் நின்ற ⋆
செங்கண் மால் தன்னுடைய ⋆

வாய்த் தீர்த்தம் பாய்ந்தாட வல்லாய் ⋆
வலம் புரியே ! ॥ **7.6** ॥ 69

செங்கமல நாண் மலர் மேல் ⋆
தேனுகரும் அன்னம் போல் ⋆
செங்கண் கரு மேனி ⋆
வாசுதேவனுடய ⋆
அங்கைத் தலம் ஏறி ⋆
அன்ன வசஞ்செய்யும் ⋆
சங்கரையா ! உன் செல்வம் ⋆
சால அழகியதே ! ॥ **7.7** ॥ 70

உண்பது சொல்லில் ⋆
உலகளந்தான் வாய் அமுதம் ⋆
கண் படை கொள்ளல் ⋆
கடல் வண்ணன் கைத் தலத்தே ⋆
பெண் படையார் உன் மேல் ⋆
பெரும் பூசல் சாற்றுகின்றார் ⋆
பண்பல செய்கின்றாய் ⋆
பாஞ்சசன்னியமே ! ॥ **7.8** ॥ 71

பதினாறாம் ஆயிரவர் ⋆
தேவிமார் பார்த்திருப்ப ⋆
மது வாயில் கொண்டாற் போல் ⋆
மாதவன் தன் வாய் அமுதம் ⋆
பொதுவாக உண்பதனைப் ⋆
புக்கு நீ உண்டக்கால் ⋆

சிதையாரோ உன்னோடு ⋆
செல்வப் பெருஞ்சங்கே ! ॥ **7.9** ॥ 72

‡ பாஞ்சசன்னியத்தைப் ⋆
பற்பநாபனோடும் ⋆
வாய்ந்த பெருஞ்சுற்றம் ஆக்கிய ⋆
வண் புதுவை ⋆
ஏய்ந்த புகழ்ப் பட்டர் பிரான் ⋆
கோதை தமிழ் ஈர் ஐந்தும் ⋆
ஆய்ந்தேத்த வல்லார் ⋆
அவரும் அணுக்கரே ॥ **7.10** ॥ 73

அடிவரவு — கருப்பூரம் கடலில் தடவரை சந்திர உன்னோடு போய் செங்கமலம் உண்பது பதினாறு பாஞ்சசன்னியத்தை விண்ணீல

கருப்பூரம் நாறுமோ முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 8 – விண்ணீல மேலாப்பு

‡ விண்ணீல மேலாப்பு ⋆
விரித்தாற் போல் மேகங்காள் ⋆
தெண்ணீர் பாய் வேங்கடத்து ⋆
என் திருமாலும் போந்தானே ⋆
கண்ணீர்கள் முலைக் குவட்டில் ⋆
துளி சோரச் சோர்வேனை ⋆
பெண்ணீர்மை ஈடழிக்கும் ⋆
இது தமக்கோர் பெருமையே ‖ **8.1** ‖ 74

மா முத்த நிதி சொரியும் ⋆
மா முகில்காள் ⋆
வேங்கடத்துச் சாமத்தின் நிறங்கொண்ட ⋆
தாளாளன் வார்த்தை என்னே ⋆
காமத் தீ உள் புகுந்து ⋆
கதுவப் பட்டிடைக் கங்குல் ⋆
ஏமத்தோர் தென்றலுக்கு ⋆
இங்கிலக்காய் நான் இருப்பேனே ‖ **8.2** ‖ 75

ஒளி வண்ணம் வளை சிந்தை ⋆
உறக்கத்தோடிவை எல்லாம் ⋆
எளிமையால் இட்டென்னை ⋆
ஈடழியப் போயினவால் ⋆
குளிர் அருவி வேங்கடத்து ⋆

என் கோவிந்தன் குணம் பாடி ⋆
அளி அத்த மேகங்காள் ! ⋆
ஆவி காத்திருப்பேனே ॥ **8.3** ॥ 76

மின் ஆகத்தெழுகின்ற ⋆
மேகங்காள் ⋆
வேங்கடத்துத் தன் ஆகத் திருமங்கை ⋆
தங்கிய சீர் மார்வற்கு ⋆
என் ஆகத்திளங்கொங்கை ⋆
விரும்பித் தாம் நாள் தோறும் ⋆
பொன் ஆகம் புல்குதற்கு ⋆
என் புரிவுடைமை செப்புமினே ॥ **8.4** ॥ 77

வான் கொண்டு கிளர்ந்தெழுந்த ⋆
மா முகில்காள் ! ⋆
வேங்கடத்துத் தேன் கொண்ட மலர் சிதறத் ⋆
திரண்டேறிப் பொழிவீர்காள் ⋆
ஊன் கொண்ட வள் உகிரால் ⋆
இரணியனை உடல் இடந்தான் ⋆
தான் கொண்ட சரி வளைகள் ⋆
தருமாகில் சாற்றுமினே ॥ **8.5** ॥ 78

சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த ⋆
தண் முகில்காள் ! ⋆
மா வலியை நிலங்கொண்டான் வேங்கடத்தே ⋆
நிரந்தேறிப் பொழிவீர்காள் ⋆
உலங்குண்ட விளங்கனி போல் ⋆
உள் மெலியப் புகுந்து ⋆

என்னை நலங்கொண்ட நாரணற்கு ⋆
என் நடலை நோய் செப்புமினே ॥ **8.6** ॥ 79

‡ சங்க மா கடல் கடைந்தான் ⋆
தண் முகில்காள் ! ⋆
வேங்கடத்துச் செங்கண் மால் சேவடிக் கீழ் ⋆
அடி வீழ்ச்சி விண்ணப்பம் ⋆
கொங்கை மேல் குங்குமத்தின் ⋆
குழம்பழியப் புகுந்து ⋆
ஒரு நாள் தங்குமேல் ⋆
என் ஆவி தங்குமென்றுரையீரே ॥ **8.7** ॥ 80

கார் காலத்தெழுகின்ற ⋆
கார்முகில்காள் ! ⋆
வேங்கடத்துப் போர் காலத்தெழுந்தருளிப் ⋆
பொருதவனார் பேர் சொல்லி ⋆
நீர் காலத் தெருக்கில் ⋆
அம் பழவிலை போல் வீழ்வேனை ⋆
வார் காலத்தொரு நாள் ⋆
தம் வாசகம் தந்தருளாரே ॥ **8.8** ॥ 81

மத யானை போல் எழுந்த ⋆
மா முகில்காள் ! ⋆
வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் ! ⋆
பாம்பணையான் வார்த்தை என்னே ⋆
கதி என்றும் தான் ஆவான் ⋆
கருதாது ⋆

ஓர் பெண் கொடியை வதை செய்தான் என்னும் சொல் ⋆
வையகத்தார் மதியாரே ‖ **8.9** ‖ 82

‡ நாகத்தின் அணையானை ⋆
நன்னுதலாள் நயந்துரை செய் மேகத்தை ⋆
வேங்கடக் கோன் ⋆
விடு தூதில் விண்ணப்பம் ⋆
போகத்தில் வழுவாத ⋆
புதுவையர் கோன் கோதை தமிழ் ⋆
ஆகத்து வைத்துரைப்பார் அவர் ⋆
அடியார் ஆகுவரே ‖ **8.10** ‖ 83

அடிவரவு — விண்ணீல மா ஒளி மின் வான் சலம் சங்கம் கார் மதம் நாக சிந்துரம்

விண்ணீல மேலாப்பு முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 9 – சிந்துரச் செம்பொடி

‡ சிந்துரச் செம் பொடிப் போல் ⋆
திருமாலிருஞ்சோலை எங்கும் ⋆
இந்திர கோபங்களே ⋆
எழுந்தும் பரந்திட்டனவால் ⋆
மந்தரம் நாட்டி அன்று ⋆
மதுரக் கொழுஞ்சாறு கொண்ட ⋆
சுந்தரத் தோளுடையான் ⋆
சுழலையில் நின்றுய்துங்கொலோ ! ‖ **9.1** ‖ 84

போர்க்களிறு பொரும் ⋆
மாலிருஞ்சோலை அம் பூம் புறவில் ⋆
தார்க் கொடி முல்லைகளும் ⋆
தவள நகை காட்டுகின்ற ⋆
கார்க்கொள் படாக்கள் நின்று ⋆
கழறிச் சிரிக்கத் தரியேன் ⋆
ஆர்க்கிடுகோ தோழீ ! ⋆
அவன் தார் செய்த பூசலையே ‖ **9.2** ‖ 85

கருவிளை ஒண்மலர்காள் ! ⋆
காயா மலர்காள் ⋆
திருமால் உருவொளி காட்டுகின்றீர் ⋆
எனக்குய் வழக்கொன்றுரையீர் ⋆
திரு விளையாடு திண் தோள் ⋆

திருமாலிருஞ்சோலை நம்பி ⋆
வரிவளை இல் புகுந்து ⋆
வந்தி பற்றும் வழக்குளதே ॥ **9.3** ॥ 86

பைம் பொழில் வாழ் குயில்காள் ! மயில்காள் ! ⋆
ஒண் கருவிளைகாள் ⋆
வம்பக் களங்கனிகாள் ! ⋆
வண்ணப் பூவை நறு மலர்காள் ⋆
ஐம் பெரும் பாதகர்காள் ! ⋆
அணி மாலிருஞ்சோலை நின்ற ⋆
எம் பெருமானுடைய நிறம் ⋆
உங்களுக்கென் செய்வதே ॥ **9.4** ॥ 87

துங்க மலர்ப் பொழில் சூழ் ⋆
திருமாலிருஞ்சோலை நின்ற ⋆
செங்கண் கரு முகிலின் ⋆
திரு உருப் போல் ⋆
மலர் மேல் தொங்கிய வண்டினங்காள் ! ⋆
தொகு பூஞ்சுனைகாள் ! ⋆
சுனையில் தங்கு செந்தாமரைகாள் ! ⋆
எனக்கோர் சரண் சாற்றுமினே ॥ **9.5** ॥ 88

‡ நாறு நறும் பொழில் ⋆
மாலிருஞ்சோலை நம்பிக்கு ⋆
நான் நூறு தடாவில் வெண்ணெய் ⋆
வாய் நேர்ந்து பராவி வைத்தேன் ⋆
நூறு தடா நிறைந்த ⋆
அக்கார அடிசில் சொன்னேன் ⋆

ஏறு திரு உடையான் ⋆
இன்று வந்திவை கொள்ளுங்கொலோ ! ‖ **9.6** ‖ 89

இன்று வந்தித்தனையும் ⋆
அமுது செய்திடப் பெறில் ⋆
நான் ஒன்று நூறாயிரமாக் கொடுத்து ⋆
பின்னும் ஆளும் செய்வன் ⋆
தென்றல் மணங்கமழும் ⋆
திருமாலிருஞ்சோலை தன்னுள் நின்ற பிரான் ⋆
அடியேன் மனத்தே வந்து ⋆
நேர் படிலே ‖ **9.7** ‖ 90

காலை எழுந்திருந்து ⋆
கரிய குருவிக் கணங்கள் ⋆
மாலின் வரவு சொல்லி ⋆
மருள் பாடுதல் மெய்ம்மை கொலோ ⋆
சோலை மலைப் பெருமான் ⋆
துவராபதி எம் பெருமான் ⋆
ஆலின் இலைப் பெருமான் ⋆
அவன் வார்த்தை உரைக்கின்றதே ‖ **9.8** ‖ 91

கோங்கலரும் பொழில் ⋆
மாலிருஞ்சோலையில் கொன்றைகள் மேல் ⋆
தூங்கு பொன் மாலைகளோடு ⋆
உடனாய் நின்று தூங்குகின்றேன் ⋆
பூங்கொள் திருமுகத்து ⋆
மடுத்தூதிய சங்கொலியும் ⋆

சார்ங்கவில் நாண் ஒலியும் ⋆
தலைப் பெய்வதெஞ்ஞான்று கொலோ ! ‖ **9.9** ‖ 92

‡ சந்தொடு கார் அகிலும் சுமந்து ⋆
தடங்கள் பொருது ⋆
வந்திழியும் சிலம்பாறுடை ⋆
மாலிருஞ்சோலை நின்ற சுந்தரனை ⋆
சுரும்பார் குழல் ⋆
கோதை தொகுத்துரைத்த ⋆
செந் தமிழ் பத்தும் வல்லார் ⋆
திருமால் அடி சேர்வர்களே ‖ **9.10** ‖ 93

அடிவரவு — சிந்துரம் போர் கருவிளை பைம்பொழில் துங்கம் நாறு இன்று காலை கோங்கு சந்தொடு கார்க்கோடல்

சிந்துரச் செம்பொடி முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 10 – கார்க்கோடல் பூக்காள்

‡ கார்க் கோடல் பூக்காள் ! ⋆
கார்க் கடல் வண்ணன் என் மேல் ⋆
உம்மைப் போர்க் கோலம் செய்து ⋆
போர விடுத்தவன் எங்குற்றான் ⋆
ஆர்க்கோ இனி நாம் ⋆
பூசல் இடுவது ⋆
அணி துழாய்த் தார்க்கோடும் நெஞ்சந் தன்னை ⋆
படைக்க வல்லேன் அந்தோ ! ‖ **10.1** ‖ 94

மேல் தோன்றிப் பூக்காள் ! ⋆
மேல் உலகங்களின் மீது போய் ⋆
மேல் தோன்றும் சோதி ⋆
வேத முதல்வர் வலங்கையில் ⋆
மேல் தோன்றும் ஆழியின் ⋆
வெஞ்சுடர் போலச் சுடாது ⋆
எம்மை மாற்றோலைப் பட்டவர் ⋆
கூட்டத்து வைத்து கொள்கிற்றிரே ‖ **10.2** ‖ 95

கோவை மணாட்டி ! ⋆
நீ உன் கொழுங்கனி கொண்டு ⋆
எம்மை ஆவி தொலைவியேல் ⋆
வாய் அழகர் தம்மை அஞ்சுதும் ⋆
பாவியேன் தோன்றி ⋆

பாம்பணையார்க்கும் தம் பாம்பு போல் ⋆
நாவும் இரண்டுள வாய்த்து ⋆
நாணிலியேனுக்கே ॥ **10.3** ॥ 96

முல்லைப் பிராட்டி ! ⋆
நீ உன் முறுவல்கள் கொண்டு ⋆
எம்மை அல்லல் விளைவியேல் ⋆
ஆழி நங்காய் ! உன் அடைக்கலம் ⋆
கொல்லை அரக்கியை மூக்கரிந்திட்ட ⋆
குமரனார் சொல்லும் பொய்யானால் ⋆
நானும் பிறந்தமை பொய் அன்றே ॥ **10.4** ॥ 97

பாடும் குயில்காள் ! ⋆
ஈதென்ன பாடல் ⋆
நல் வேங்கட நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் ⋆
வந்து பாடுமின் ⋆
ஆடும் கருளக் கொடி உடையார் ⋆
வந்தருள் செய்து ⋆
கூடுவர் ஆயிடில் ⋆
கூவி நும் பாட்டுக்கள் கேட்டுமே ॥ **10.5** ॥ 98

கண மா மயில்காள் ! ⋆
கண்ண பிரான் திருக் கோலம் போன்று ⋆
அணி மா நடம் பயின்றாடுகின்றீர்க்கு ⋆
அடி வீழ்கின்றேன் ⋆
பணம் ஆடரவணைப் ⋆
பற்பல காலமும் பள்ளி கொள் ⋆

மணவாளர் நம்மை வைத்த ⋆
பரிசிது காண்மினே ‖ **10.6** ‖ 99

நடம் ஆடித் தோகை விரிக்கின்ற ⋆
மா மயில்காள் ⋆
உம்மை நடம் ஆட்டம் காணப் ⋆
பாவியேன் நான் ஓர் முதல் இலேன் ⋆
குடம் ஆடு கூத்தன் ⋆
கோவிந்தன் கோமிறை செய்து ⋆
எம்மை உடை மாடு கொண்டான் ⋆
உங்களுக்கினி ஒன்று போதுமே ‖ **10.7** ‖ 100

மழையே ! மழையே ! மண் புறம் பூசி ⋆
உள்ளாய் நின்று ⋆
மெழுகூற்றினாற் போல் ⋆
ஊற்றுநல் வேங்கடத்துள் நின்ற ⋆
அழகப் பிரானார் தம்மை ⋆
என் நெஞ்சத்தகப்படத்தழுவி நின்று ⋆
என்னைத் ததர்த்திக் கொண்டு ⋆
ஊற்றவும் வல்லையே ‖ **10.8** ‖ 101

கடலே ! கடலே ! உன்னைக் கடைந்து ⋆
கலக்குறுத்து ⋆
உடலுள் புகுந்து நின்று ⋆
ஊறல் அறுத்தவற்கு ⋆
என்னையும் உடலுள் புகுந்து நின்று ⋆
ஊறல் அறுக்கின்ற மாயற்கு ⋆

என் நடலைகள் எல்லாம் ⋆
நாகணைக்கே சென்றுரைத்தியே ‖ **10.9** ‖ 102

‡ நல்ல என் தோழி ! ⋆
நாகணை மிசை நம்பரர் ⋆
செல்வர் பெரியர் ⋆
சிறு மானிடவர் நாம் செய்வதென் ⋆
வில்லி புதுவை ⋆
விட்டுசித்தர் தங்கள் தேவரை ⋆
வல்ல பரிசு வருவிப்பரேல் ⋆
அது காண்டுமே ‖ **10.10** ‖ 103

அடிவரவு — கார்க்கோடல் மேல் கோவை முல்லை பாடும் கணம் நடமாடி மழையே கடலே நல்ல தாம்

கார்க்கோடல் பூக்காள் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11 – தாமுகக்கும்

‡ தாம் உகக்கும் தம் கையில் ⋆
சங்கமே போலாவோ ⋆
யாம் உகக்கும் எங்கையில் ⋆
சங்கமும் ஏந்திழையீர் ! ⋆
தீ முகத்து நாகணை மேல் ⋆
சேரும் திருவரங்கர் ⋆
ஆ ! முகத்தை நோக்கார் ஆல் ⋆
அம்மனே ! அம்மனே ! ‖ **11.1** ‖ 104

எழில் உடைய அம்மனைமீர் ! ⋆
என் அரங்கத்தின் அமுதர் ⋆
குழல் அழகர் வாய் அழகர் ⋆
கண் அழகர் ⋆
கொப்பூழில் எழு கமலப் பூ அழகர் ⋆
எம் மானார் ⋆
என்னுடைய கழல் வளையைத் ⋆
தாமும் கழல் வளையே ஆக்கினரே ‖ **11.2** ‖ 105

‡ பொங்கோதம் சூழ்ந்த ⋆
புவனியும் விண் உலகும் ⋆
அங்காதும் சோராமே ⋆
ஆள்கின்ற எம் பெருமான் ⋆
செங்கோல் உடைய ⋆

திருவரங்கச் செல்வனார் ⋆
எங்கோல் வளையால் ⋆
இடர் தீர்வர் ஆகாதே ॥ **11.3** ॥ 106

மச்சணி மாட ⋆
மதிள் அரங்கர் வாமனனார் ⋆
பச்சைப் பசுந் தேவர் ⋆
தாம் பண்டு நீர் ஏற்ற ⋆
பிச்சைக் குறை ஆகி ⋆
என்னுடைய பெய்வளை மேல் ⋆
இச்சை உடையரேல் ⋆
இத் தெருவே போதாரே ॥ **11.4** ॥ 107

பொல்லாக் குறள் உருவாய்ப் ⋆
பொற் கையில் நீர் ஏற்று ⋆
எல்லா உலகும் ⋆
அளந்து கொண்ட எம் பெருமான் ⋆
நல்லார்கள் வாழும் ⋆
நளிர் அரங்க நாகணையான் ⋆
இல்லாதோம் கைப் பொருளும் ⋆
எய்துவான் ஒத்துளனே ॥ **11.5** ॥ 108

கைப் பொருள்கள் முன்னமே ⋆
கைக் கொண்டார் ⋆
காவிரி நீர் செய்ப் புரள ஓடும் ⋆
திருவரங்கச் செல்வனார் ⋆
எப்பொருட்கும் நின்று ⋆
ஆர்க்கும் எய்தாது ⋆

நான் மறையின் சொற் பொருளாய் நின்றார் ⋆
என் மெய்ப் பொருளும் கொண்டாரே ‖ **11.6** ‖ 109

உண்ணாதுறங்காது ⋆
ஒலி கடலை ஊடறுத்துப் ⋆
பெண் ஆக்கை யாப்புண்டு ⋆
தாம் உற்ற பேதெல்லாம் ⋆
திண்ணார் மதிள் சூழ் ⋆
திருவரங்கச் செல்வனார் ⋆
எண்ணாதே தம்முடைய ⋆
நன்மைகளே எண்ணுவரே ‖ **11.7** ‖ 110

‡ பாசி தூர்த்துக் கிடந்த ⋆
பார் மகட்குப் ⋆
பண்டொருநாள் மாசுடம்பில் நீர் வாரா ⋆
மானம் இலாப் பன்றியாம் ⋆
தேசுடைய தேவர் ⋆
திருவரங்கச் செல்வனார் ⋆
பேசி இருப்பனகள் ⋆
பேர்க்கவும் பேராவே ‖ **11.8** ‖ 111

கண்ணாலம் கோடித்துக் ⋆
கன்னி தன்னைக் கைப் பிடிப்பான் ⋆
திண் ஆர்ந்திருந்த ⋆
சிசுபாலன் தேசழிந்து ⋆
அண்ணாந்திருக்கவே ⋆
ஆங்கவளைக் கைப் பிடித்த ⋆

பெண்ணாளன் பேணும் ஊர் ⋆
பேரும் அரங்கமே ‖ **11.9** ‖ 112

‡ செம்மை உடைய ⋆
திருவரங்கர் தாம் பணித்த ⋆
மெய்ம்மைப் பெரு வார்த்தை ⋆
விட்டுசித்தர் கேட்டிருப்பர் ⋆
தம்மை உகப்பாரைத் ⋆
தாம் உகப்பர் என்னும் சொல் ⋆
தம் இடையே பொய்யானால் ⋆
சாதிப்பார் ஆர் இனியே ! ‖ **11.10** ‖ 113

அடிவரவு — தாம் எழில் பொங்கு மச்சு பொல்லா கை உண்ணாது பாசி கண்ணாலம் செம்மை மற்று

தாமுகக்கும் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 12 – மற்றிருந்தீர்

‡ மற்றிருந்தீர்கட்கறியலாகா ⋆
மாதவன் என்பதோர் அன்பு தன்னை ⋆
உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லாம் ⋆
ஊமையரோடு செவிடர் வார்த்தை ⋆
பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப் ⋆
பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி ⋆
மற் பொருந்தாமற் களம் அடைந்த ⋆
மதுரைப் புறத்தென்னை உய்த்திடுமின் ॥ **12.1** ॥ 114

நாணி இனி ஓர் கருமம் இல்லை ⋆
நால் அயலாரும் அறிந்தொழிந்தார் ⋆
பாணியாதென்னை மருந்து செய்து ⋆
பண்டு பண்டாக்க உறுதிர் ஆகில் ⋆
மாணி உருவாய் உலகளந்த ⋆
மாயனைக் காணில் தலை மறியும் ⋆
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில் ⋆
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின் ॥ **12.2** ॥ 115

தந்தையும் தாயும் உற்றாரும் நிற்க ⋆
தனி வழி போயினாள் ! என்னும் சொல்லு ⋆
வந்த பின்னைப் பழி காப்பரிது ⋆
மாயவன் வந்துருக் காட்டுகின்றான் ⋆
கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்துக் ⋆

குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற ⋆
நந்தகோபாலன் கடைத் தலைக்கே ⋆
நள் இருட்கண் என்னை உய்த்திடுமின் ‖ **12.3** ‖ 116

அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான் ⋆
அவன் முகத்தன்றி விழியேன் என்று ⋆
செங்கச்சுக் கொண்டு கண் ஆடை ஆர்த்துச் ⋆
சிறு மானிடவரைக் காணில் நாணும் ⋆
கொங்கைத் தலம் இவை நோக்கிக் காணீர் ⋆
கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா ⋆
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய் ⋆
யமுனைக் கரைக்கென்னை உய்த்திடுமின் ‖ **12.4** ‖ 117

ஆர்க்கும் என்னோய் இதறியலாகாது ⋆
அம்மனைமீர் ! துழதிப் படாதே ⋆
கார்க் கடல் வண்ணன் என்பான் ஒருவன் ⋆
கை கண்ட யோகம் தடவத் தீரும் ⋆
நீர்க் கரை நின்ற கடம்பை ஏறிக் ⋆
காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து ⋆
போர்க் களமாக நிருத்தம் செய்த ⋆
பொய்கைக் கரைக்கென்னை உய்த்திடுமின் ‖ **12.5** ‖ 118

கார்த் தண் முகிலும் கருவிளையும் ⋆
காயா மலரும் கமலப் பூவும் ⋆
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு ⋆
இருடீ கேசன் பக்கல் போகே என்று ⋆
வேர்த்துப் பசித்து வயிறசைந்து ⋆
வேண்டடிசில் உண்ணும் போது ⋆

ஈதென்று பார்த்திருந்து நெடு நோக்குக் கொள்ளும் ⋆
பத்த விலோசனத்துய்த்திடுமின் ‖ **12.6** ‖ 119

வண்ணந் திரிவும் மனங்குழைவும் ⋆
மானம் இலாமையும் வாய் வெளுப்பும் ⋆
உண்ணல் உறாமையும் உள் மெலிவும் ⋆
ஓத நீர் வண்ணன் என்பான் ஒருவன் ⋆
தண்ணந் துழாய் என்னும் மாலை கொண்டு ⋆
சூட்டத் தணியும் ⋆
பிலம்பன் தன்னைப் பண் அழியப் பலதேவன் வென்ற ⋆
பாண்டி வடத்தென்னை உய்த்திடுமின் ‖ **12.7** ‖ 120

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான் ⋆
காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான் ⋆
பற்றி உரலிடை ஆப்பும் உண்டான் ⋆
பாவிகாள் ! உங்களுக்கேச்சுக் கொலோ ⋆
கற்றன பேசி வசவுணாதே ⋆
காலிகள் உய்ய மழை தடுத்துக் ⋆
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற ⋆
கோவர்த்தனத்தென்னை உய்த்திடுமின் ‖ **12.8** ‖ 121

கூட்டில் இருந்து கிளி எப்போதும் ⋆
கோவிந்தா ! கோவிந்தா ! என்றழைக்கும் ⋆
ஊட்டக் கொடாது செறுப்பன் ஆகில் ⋆
உலகளந்தான் ! என்றுயரக் கூவும் ⋆
நாட்டில் தலைப் பழி எய்தி ⋆
உங்கள் நன்மை இழந்து தலை இடாதே ⋆

சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும் ⋆
துவராபதிக்கென்னை உய்த்திடுமின் ‖ **12.9** ‖ 122

‡ மன்னு மதுரை தொடக்கமாக ⋆
வண் துவராபதி தன் அளவும் ⋆
தன்னைத் தமர் உய்த்துப் பெய்ய வேண்டித் ⋆
தாழ் குழலாள் துணிந்த துணிவை ⋆
பொன் இயல் மாடம் பொலிந்து தோன்றும் ⋆
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை ⋆
இன் இசையால் சொன்ன செஞ்சொல் மாலை ⋆
ஏத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே ‖ **12.10** ‖ 123

அடிவரவு — மற்று நாணி தந்தை அங்கை ஆர்க்கும் கார்த்தண் வண்ணம் கற்றினம் கூட்டில் மன்னு கண்ணன்

மற்றிருந்தீர் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 13 – கண்ணனென்னும்

‡ கண்ணன் என்னும் கருந்தெய்வம் ⋆
காட்சிப் பழகிக் கிடப்பேனை ⋆
புண்ணில் புளிப் பெய்தாற் போலப் ⋆
புறம் நின்றழகு பேசாதே ⋆
பெண்ணின் வருத்தம் அறியாத ⋆
பெருமான் அரையில் பீதக வண்ண ஆடை கொண்டு ⋆
என்னை வாட்டம் தணிய வீசீரே ‖ **13.1** ‖ 124

பால் ஆலிலையில் துயில் கொண்ட ⋆
பரமன் வலைப் பட்டிருந்தேனை ⋆
வேலால் துன்னம் பெய்தாற் போல் ⋆
வேண்டிற்றெல்லாம் பேசாதே ⋆
கோலால் நிரை மேய்த்தாயனாய்க் ⋆
குடந்தைக் கிடந்த குடம் ஆடி ⋆
நீலார் தண்ணந் துழாய் கொண்டு ⋆
என் நெறி மென் குழல் மேல் சூட்டீரே ‖ **13.2** ‖ 125

கஞ்சைக் காய்ந்த கரு வில்லி ⋆
கடைக் கண் என்னும் சிறைக் கோலால் ⋆
நெஞ்சூடுருவ வேவுண்டு ⋆
நிலையும் தளர்ந்து நைவேனை ⋆
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன் ⋆
அவன் மார்பணிந்த வனமாலை ⋆

வஞ்சியாதே தருமாகில் ⋆
மார்பில் கொணர்ந்து புரட்டீரே ‖ **13.3** ‖ 126

ஆரே உலகத்தாற்றுவார் ⋆
ஆயர் பாடி கவர்ந்துண்ணும் ⋆
காரேறுழக்க உழக்குண்டு ⋆
தளர்ந்தும் முறிந்தும் கிடப்பேனை ⋆
ஆராவமுதம் அனையான் தன் ⋆
அமுத வாயில் ஊறிய ⋆
நீர் தான் கொணர்ந்து புலராமே ⋆
பருக்கி இளைப்பை நீக்கீரே ‖ **13.4** ‖ 127

அழிலும் தொழிலும் உருக் காட்டான் ⋆
அஞ்சேல் என்னான் அவன் ஒருவன் ⋆
தழுவி முழுகிப் புகுந்தென்னைச் ⋆
சுற்றிச் சுழன்று போகானால் ⋆
தழையின் பொழில்வாய் நிரைப் பின்னே ⋆
நெடுமால் ஊதி வருகின்ற ⋆
குழலின் தொளைவாய் நீர் கொன்டு ⋆
குளிர முகத்துத் தடவீரே ‖ **13.5** ‖ 128

நடை ஒன்றில்லா உலகத்து ⋆
நந்தகோபன் மகன் என்னும் ⋆
கொடிய கடிய திருமாலால் ⋆
குளப்புக் கூறு கொளப்பட்டு ⋆
புடையும் பெயரகில்லேன் நான் ⋆
போட்கன் மிதித்த அடிப்பாட்டில் ⋆

பொடித் தான் கொணர்ந்து பூசீர்கள் ⋆
போகா உயிர் என் உடம்பையே ॥ **13.6** ॥ 129

வெற்றிக் கருளக் கொடியான் தன் ⋆
மீ மீதாடா உலகத்து ⋆
வெற்ற வெறிதே பெற்ற தாய் ⋆
வேம்பே ஆக வளர்த்தாளே ⋆
குற்றம் அற்ற முலை தன்னைக் ⋆
குமரன் கோலப் பணைத் தோளோடு ⋆
அற்ற குற்றம் அவை தீர ⋆
அணைய அமுக்கிக் கட்டீரே ॥ **13.7** ॥ 130

உள்ளே உருகி நைவேனை ⋆
உளளோ இலளோ என்னாத ⋆
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் ⋆
கோவர்த்தனனைக் கண்டக்கால் ⋆
கொள்ளும் பயன் ஒன்றில்லாத ⋆
கொங்கை தன்னைக் கிழங்கோடும் ⋆
அள்ளிப் பறித்திட்டவன் மார்பில் எறிந்து ⋆
என் அழலை தீர்வேனே ॥ **13.8** ॥ 131

கொம்மை முலைகள் இடர் தீரக் ⋆
கோவிந்தற்கோர் குற்றேவல் ⋆
இம்மைப் பிறவி செய்யாதே ⋆
இனிப் போய்ச் செய்யும் தவந்தான் என் ⋆
செம்மை உடைய திருமார்பில் ⋆
சேர்த்தானேலும் ஒரு ஞான்று ⋆

மெய்ம்மை சொல்லி முகம் நோக்கி ⋆
விடை தான் தருமேல் மிக நன்றே ‖ **13.9** ‖ 132

‡ அல்லல் விளைத்த பெருமானை ⋆
ஆயர் பாடிக்கணி விளக்கை ⋆
வில்லி புதுவை நகர் நம்பி ⋆
விட்டுசித்தன் வியன் கோதை ⋆
வில்லைத் தொலைத்த புருவத்தாள் ⋆
வேட்கை உற்றுமிக விரும்பும் ⋆
சொல்லைத் துதிக்க வல்லார்கள் ⋆
துன்பக் கடலுள் துவளாரே ‖ **13.10** ‖ 133

அடிவரவு — கண்ணன் பால் கஞ்சை ஆரே அழில் நடை வெற்றி உள்ளே கொம்மை அல்லல் பட்டி

கண்ணனென்னும் முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 14 – பட்டி மேய்ந்து

‡ பட்டி மேய்ந்தோர் காரேறு ⋆
பலதேவற்கோர் கீழ்க் கன்றாய் ⋆
இட்டீறிட்டு விளையாடி ⋆
இங்கே போதக் கண்டீரே ⋆
இட்ட மான பசுக்களை ⋆
இனிது மறித்து நீர் ஊட்டி ⋆
விட்டுக் கொண்டு விளையாட ⋆
விருந்தா வனத்தே கண்டோமே ‖ **14.1** ‖ 134

அனுங்க என்னைப் பிரிவு செய்து ⋆
ஆயர் பாடி கவர்ந்துண்ணும் ⋆
குணுங்கு நாறிக் குட்டேற்றைக் ⋆
கோவர்த்தனனைக் கண்டீரே ⋆
கணங்களோடு மின் மேகம் ⋆
கலந்தாற் போல் வனமாலை ⋆
மினுங்க நின்று விளையாட ⋆
விருந்தா வனத்தே கண்டோமே ‖ **14.2** ‖ 135

மாலாய்ப் பிறந்த நம்பியை ⋆
மாலே செய்யும் மணாளனை ⋆
ஏலாப் பொய்கள் உரைப்பானை ⋆
இங்கே போதக் கண்டீரே ⋆
மேலால் பரந்த வெயில் காப்பான் ⋆

வினதை சிறுவன் சிறகென்னும் ⋆
மேலாப்பின் கீழ் வருவானை ⋆
விருந்தா வனத்தே கண்டோமே ‖ **14.3** ‖ 136

கார்த் தண் கமலக் கண் என்னும் ⋆
நெடுங்கயிறு படுத்தி ⋆
என்னை ஈர்த்துக் கொண்டு விளையாடும் ⋆
ஈசன் தன்னைக் கண்டீரே ⋆
போர்த்த முத்தின் குப்பாயப் ⋆
புகர் மால் யானைக் கன்றே போல் ⋆
வேர்த்து நின்று விளையாட ⋆
விருந்தா வனத்தே கண்டோமே ‖ **14.4** ‖ 137

‡ மாதவன் என் மணியினை ⋆
வலையில் பிழைத்த பன்றி போல் ⋆
ஏதும் ஒன்றும் கொளத் தாரா ⋆
ஈசன் தன்னைக் கண்டீரே ⋆
பீதக ஆடை உடை தாழப் ⋆
பெருங்கார் மேகக் கன்றே போல் ⋆
வீதி ஆர வருவானை ⋆
விருந்தா வனத்தே கண்டோமே ‖ **14.5** ‖ 138

தருமம் அறியாக் குறும்பனைத் ⋆
தன் கைச் சார்ங்கம் அதுவே போல் ⋆
புருவ வட்டம் அழகிய ⋆
பொருத்தம் இலியைக் கண்டீரே ⋆
உருவு கரிதாய் முகம் செய்தாய் ⋆
உதயப் பருப்பதத்தின் மேல் ⋆

விரியும் கதிரே போல் வானை ⋆
விருந்தா வனத்தே கண்டோமே || **14.6** || 139

பொருத்தம் உடைய நம்பியைப் ⋆
புறம் போல் உள்ளும் கரியானை ⋆
கருத்தைப் பிழைத்து நின்ற ⋆
அக்கரு மா முகிலைக் கண்டீரே ⋆
அருத்தித் தாரா கணங்களால் ⋆
ஆரப் பெருகு வானம் போல் ⋆
விருத்தம் பெரிதாய் வருவானை ⋆
விருந்தா வனத்தே கண்டோமே || **14.7** || 140

வெளிய சங்கொன்றுடையானைப் ⋆
பீதக ஆடை உடையானை ⋆
அளி நன்குடைய திருமாலை ⋆
ஆழியானைக் கண்டீரே ⋆
களி வண்டெங்கும் கலந்தாற் போல் ⋆
கமழ் பூங்குழல்கள் தடந் தோள் மேல் ⋆
மிளிர நின்று விளையாட ⋆
விருந்தா வனத்தே கண்டோமே || **14.8** || 141

‡ நாட்டைப் படை என்றயன் முதலாத் தந்த ⋆
நளிர் மா மலர் உந்தி ⋆
வீட்டைப் பண்ணி விளையாடும் ⋆
விமலன் தன்னைக் கண்டீரே ⋆
காட்டை நாடித் தேனுகனும் ⋆
களிறும் புள்ளும் உடன் மடிய ⋆

வேட்டை ஆடி வருவானை ⋆
விருந்தா வனத்தே கண்டோமே ॥ **14.9** ॥ 142

‡ பருந் தாள் களிற்றுக்கருள் செய்த ⋆
பரமன் தன்னை ⋆
பாரின் மேல் விருந்தா வனத்தே கண்டமை ⋆
விட்டுசித்தன் கோதை சொல் ⋆
மருந்தாம் என்று தம் மனத்தே ⋆
வைத்துக் கொண்டு வாழ்வார்கள் ⋆
பெருந் தாள் உடைய பிரான் அடிக்கீழ் ⋆
பிரியாதென்றும் இருப்பாரே ॥ **14.10** ॥ 143

அடிவரவு — பட்டி அனுங்க மால் கார்த்தண் மாதவன் தருமம் பொருத்தம் வெளிய நாட்டை பருந்தாள் இருள்

பட்டி மேய்ந்து முற்றிற்று

ஆண்டாள் திருவடிகளே சரணம்